# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 30.01.2026**

**CC. 273/2024**

**2ம் எதிரி ஆஜர், 1,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா. 2 (டேனியல் சார்லஸ்) மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் நான் பாலமுருகனிடம் வேலை செய்து கொண்டிருந்தேனா என்றால் நானும், பாலமுருகனும் ஒரே நிறுவனத்தில் வேலை செய்துகொண்டிருந்தோம். சம்பவம் நடந்த சமயத்தில் Sales Manager ஆகவும், பாலமுருகன் Deputy General Manager ஆக பணியாற்றினோம். பாலமுருகன் என்னிடம் தொலைபேசியில் சம்பவம் தொடர்பாக போலீசிடம் புகார் கொடுக்க அழைத்ததன்பேரில் சென்றேன் என்றால் சரிதான். சம்பவத்தை பற்றி நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். பாலமுருகன் தொலைபேசியில் அழைத்ததன்பேரில் சென்றேன். அ.சா.1ம், நானும் ஒரே நிறுவனத்தில் வேலை செய்ததால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**